# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2009
புரட்டாதி 11
ஷவ்வால் பிறை 23
புதன் (27-9-1978)
நிறுவியது 1947
புத்தகம் 32
இதழ் 34

விலை சதம் 35


# தமிழின சங்காரத்துக்கு தயாராகிவிட்டார் ஜே. ஆர்!

## வடபகுதியிலும் சிங்களவர்களை குடியேற்றப்போவதாக அறிவிப்பு

தமிழ் பேசும் மக்களின் மரபுவழித்தாயகமான தமிழ் ஈழப்பிரதேசங்களில் ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் 'தர்மிஷ்ட' அரசாங்கம் சிங்களவர்களைப் பெருமளவில் குடியேற்றி தமிழினத்தின் தனித்தேசியத் தன்மையை (Nation Hood) அழித்தொழித்து, தமிழ் மக்களை அவர்களின் சொந்த நாடான தமிழ் ஈழத்திலேயே சிறுபான்மையினராக்கும் பயங்கர பாசிஸ இன ஒழிப்புக் கொள்கையை நடைமுறைப்படுத்த விருக்கிறது.

சிங்களக் குடியேற்றத்தின் மூலம் தமிழ் ஈழத்தை ஆக்கிரமித்து விட்டால்; அதன் பின் சுதந்திரம் கோருவதற்கோ இனக்கலவரம் ஏற்படும்போது தஞ்சம் அடைவதற்கோ தமிழர்களுக்கென ஒரு பிரதேசமேயிருக்காதென்றும், இதன் காரணமாக சுதந்திரத் தமிழ் ஈழக்கோரிக்கையை முறியடித்துவிடும் அதே சமயம், தமிழர்களைப் பயமுறுத்தி சிங்களவர்களோடு இரண்டறக்கலந்து விடச் செய்ய முடியும் என்றும் அரசாங்கம் கருதுகிறதாம்.

சிங்கள பௌத்த வெறியர்களின் ஆசைப்படி தமிழ் மக்களின் பாரம்பரியத்தாயகத்தில் சிங்களவர்களைக் குடியேற்றி தமிழின சங்காரத்தை நடத்தி முடிப்பதற்கு திரு. ஜெயவர்த்தனா 'விசுவ ரூபம்' எடுக்கிறார். அத்துடன் ஜனநாயகம் பற்றி வாய்கிழியப் பேசிவரும் ஜனாதிபதி, அதே ஜனநாயக அடிப்படையில் தமிழ் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழர் விடுதலைக்கூட்டணிப் பிரதிநிதிகளை அலட்சியப்படுத்திவிட்டு தமிழ் மக்களிடையே நேரடியாக தாம் ஊடுருவல் செய்யப்போவதாகவும் ஆணவத்துடன் பேசியுள்ளார்,

கடந்த 21-9-78 வியாழக்கிழமை அரசாங்கப்பாராளுமன்றக் குழுக்கூட்டத்தில் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா நிகழ்த்தியதாக கூறப்படும் உரையில் தெரிவித்த கருத்துக்கள் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் செய்தியிலும் நாளேடுகளிலும் வெளிவந்து தமிழ் மக்களுக்கு பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன.

தமிழர்களுக்கென்று பாரம்பரியப்பிரதேசம் எதுவும் கிடையாதென்றும், வடபிரதேசத்தில் சிங்களவர்களை குடியேற்ற வேண்டுமென்றும், சிங்கள இராணுவத்தை நிரந்தரமாக வடக்கில் நிறுத்திவைக்க வேண்டுமென்றும் இனவெறிச் சிங்களவர்களும், பௌத்த பிக்குகளும், சிறில்

—4-ம் பக்கம் பார்க்க

## 'டைம் பாம்' வெடித்த சரியான 'டைம்'

''புதிய அரசியல் சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட தினத்தன்று, ஜனாதிபதி பதவிப்பிரமாணம் செய்துகொண்டிருந்த அதே வேளையில், இரத்மலானை விமான நிலையத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து வந்து நிறுத்திவைக்கப்பட்டிருந்த 'அவ்ரோ' விமானத்தினுள் இருந்த இரு குண்டுகள் வெடித்து விமானம் எரிந்தது!''

—இத்தகவலை தேசிய அரசுப்பேரவையில் பேசிய பிரதமர் பிரேமதாசா வெளியிட்டிருக்கிறார்.

## தெகிவளை, பாணந்துறையில் பதட்ட நிலை!

பாணந்துறை தெகிவளை பகுதியில் தமிழர் கடைகள் சில எரிக்கப்பட்டதாகவும், அங்கு இனக்கலவர சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாகவும் சுதந்திரனுக்கு ஏற்கெனவே தகவல் கிடைத்திருந்தது. இது பற்றி தேசிய அரசுப்பேரவையில் பேசிய பிரதமர் பிரேமதாசாவும் குறிப்பிட்டுள்ளார்.

''இனக்கலவரத்தை மீண்டும் ஏற்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்றும், ஏற்கெனவே பாணந்துறை தெகிவளை போன்ற பகுதிகளில்பதட்ட நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளதென்றும், அரசு உடனடி நடவடிக்கை மேற்கொண்டதால் நிலைமை கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதென்றும்'' திரு. பிரேமதாசா தமது பேச்சில் குறிப்பிட்டுள்ளார்.

## கல்குடா சம்பந்தமூர்த்திக்கு விளக்கமறியல்

காசி ஆனந்தன், மாவை சேனாதிராசா உட்பட 11 இளைஞர்களுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றப்பத்திரிகையில் 12வது நபராக பொலிசாரால் புதிதாகக் குறிப்பிடப்பட்டு, பிடி ஆணை பிறப்பிக்கப்பட்டிருந்தவரான கல்குடாத்தொகுதி த.வி.கூ. அமைப்பாளர் திரு. இரா. சம்பந்தமூர்த்தி 12.9.78ல் சட்டத்தரணி திரு. மு. சிவசிதம்பரத்தின் மூலம் மட்டக்களப்பு நீதிமன்றத்தில் சரணடைந்தார். இவரை 26.9.78வரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

திரு. சம்பந்தமூர்த்தி கடந்த பொதுத்தேர்தலில் கல்குடாத்தொகுதியில் நீதி அமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகத்தை எதிர்த்துப் போட்டியிட்டவரென்பதும், 520 வாக்குகளால் மட்டுமே வெற்றிவாய்ப்பை இழந்தவரென்பதும் வாசகர்கள் அறிந்ததே.

## தமிழர் விடுதலைக் கூட்டணியை மிரட்டிப் பார்க்கிறார் அதிஉத்தமர்!

''நீண்டகாலப்பிரச்சினைகளைத் தீர்த்து வைத்திருக்கும் அரசாங்கத்தோடு ஒத்துழைக்காது தமிழ் மக்களின் பிரதிநிதிகள் அரசியல் விளையாட்டு நடத்துவார்களானல், நாமே வடபகுதிக்குச் சென்று அங்கு வாழும் மக்களின் தேவைகளை நிறைவேற்றியாக வேண்டும். அரசுடன் ஒத்துழைக்குமாறு நாம் விடுக்கும் அழைப்பை தமிழ் பா.உ.க்கள் ஏற்றுக்கொள்ளாவிடில்— அவர்களைப்பற்றி எவ்வித அக்கறையும் கொள்ளாது நாமே தமிழ் மக்களின் நலன்களைக் கவனித்துக் கொள்வோம்!''

—21-9-78ல் நடைபெற்ற அரசாங்கப் பாராளுமன்றக் குழுக்கூட்டத்தில் ஜனநாயகத்தின் பாதுகாவலர் என்று தம்மைக் கூறிக்கொள்ளும் அதிஉத்தமர் ஜே.ஆர். ஜனநாயக முறைப்படி தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்டுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி பா.உ.க்களுக்கு விடுத்துள்ள மிரட்டல் இது.

## தொழிற்சங்க உரிமையை குழிதோண்டிப் புதைக்காதே!

### உலக தொழிற்சங்க சம்மேளனம் ஜே. ஆருக்குத் தந்தி

தொழிற்சங்க உரிமையையும், தொழிலாளர்களின் வேலைநிறுத்த உரிமையையும் இலங்கையில் குழிதோண்டிப் புதைக்கும் நடவடிக்கையை கைவிடும்படி

—4-ம் பக்கம் பார்க்க

## 'சன்சோனி கொமிஷன் எவிடன்ஸ்' ஏடு மீது சி.ஐ.டி. பாய்ச்சல்!

பத்திரிகையுலகில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திவரும் சன்சோனிக் கொமிஷன் முன்னிலையில் கூறப்பட்ட சாட்சியங்களையும் முறைப்பாடுகளையும் பாரபட்சமின்றி எழுத்துக்கெழுத்து அப்படியே வெளியிட்டு வருவதுமான ''சன்சோனிக்கொமிஷன் எவிடென்ஸ்'' என்ற ஆங்கில வார இதழ் மீது சி.ஐ.டி பொலிசார் கடந்த வெள்ளியன்று (22.9.78) பாய்ச்சல் நடத்தினர்.

மேற்படி இதழை அச்சிடும் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் நிறுவனத்துக்கு சென்று விசாரணை நடத்திய சி.ஐ.டி. பொலிசார், மேற்படி இதழின் வெளியீட்டா

—4-ம் பக்கம் பார்க்க

தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லண்டன் தமிழ் மாநாடு தமிழர்கள் அக்கறை!

ஐந்தாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு லண்டன் மாநகரில் இடம் பெறுமென்று முடிவாக அறிவிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, மாநாடு சம்பந்தப்பட்ட மட்டில் லண்டன் தமிழருக்குள்ள மகத்தான பொறுப்பை உணர்த்தும் வகையில் லண்டனில் வதியும் தமிழர்களுக்கு இங்குள்ள தமிழர் கடிதங்களை அனுப்பி வருவதாக அறியப்படுகிறது.

1979ம் ஆண்டு ஜனவரித் திங்களில் இடம்பெறவிருக்கும் மேற்படி தமிழாராய்ச்சி மாநாட்டு ஒழுங்குகளுக்கு பொறுப்பானவர்கள் என்ற வகையில் லண்டன் தமிழர்களுக்குள்ள பொறுப்பை உணர்த்தும் அறிவுரைகளைத் தாங்கியனவாகவே இக் கடிதங்கள் அமைகின்றன. இதுவரை இடம்பெற்ற மாநாடுகளைத் தனிப்பட்ட நாடுகளே நடத்தியுள்ளன. ஆயின் லண்டன் மாநாடோ லண்டன் வாழ் தமிழர்களால் நடத்தப்படும் மாநாடாக இருப்பதுடன், உலகத் தமிழர்களால் நடத்தப்படும் மாநாடாகவும் அமையப் போகிறது. காரணம் உலகில் எந்தெந்த நாடுகளில் எல்லாம் தமிழர்கள் வாழ்கிறார்களோ அந்தந்த நாடுகளையெல்லாம் சேர்ந்த தமிழர்கள் லண்டனில் குழுமி வாழ்கிறார்கள். அதனால் லண்டன் தமிழர் உலகத் தமிழர்களைப்பிரதிநிதித்துவப்படுத்துபவர்களாக அமைகிறார்கள்.

பாராளுமன்ற ஜனநாயகத்தின் பிறப்பிடமான லண்டன் மாநகரில் கூடவுள்ள அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுஒழுங்குகளை ஏற்பாடு செய்வதற்காக அமைக்கப்படும் பல்வேறு குழுக்களும் தமிழர் வாழும் சகல நாடுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பதவிகள் பகிர்ந்தளிக்கப்படும் வகையில் அமைய வேண்டுமென்ற விருப்பம் இங்குள்ளவர்களுக்கு. உலகத்தமிழர் மாநாட்டு தமிழ் இனவுணர்வையும், ஒருமைப்பாட்டையும் ஏற்படுத்த இப்படிப்பட்ட இணைந்த கூட்டுமுயற்சிகள் உதவக்கூடுமென்பதே அதற்குக் காரணமாகும். அவிழ்த்துவிட்ட நெல்லிக்காய்மூட்டை போன்று திக்கெட்டும் சிதறிப்போயுள்ள உலகத் தமிழர்களை ஒருமுகப்படுத்தி மாநாட்டை உலகத் தமிழர் பிரதிநிதிகளால் நடத்திக் காட்டும் வாய்ப்புப் பெற்ற ஒரே நாடாகத் திகழ்வது பிரித்தானியா ஒன்றே! அதன் தலைநகரான லண்டனில் நடைபெறும் — மாநாடாக இருப்பதால் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு வரிசையில் எதிர்வரும ஐந்தாம் மாநாடு ஒருமைல் கல்லாக அமையுமென எதிர்நோக்கப்படுகிறது.

# 'தலைவர்களுக்கு வழிகாட்டியாக விளங்கியவர் அமரர் வன்னியசிங்கம்!'

## கோப்பாய்க் கோமான் நினைவு விழாவில் பேச்சு!

"மக்கள் எவ்வளவுதான் நல்லவர்களாக இருந்தாலும் மக்களினும்பார்க்க தலைவர்கள் ஒரு படி தரத்தில் உயர்ந்திருத்தல் வேண்டும். இந்தியாவில் மகாத்மா காந்தி, நேரு போன்றவர்கள் காலத்தில் தலைவர்கள் நிலை மக்கள் நிலையிலும் தரத்தில் மேம்பட்டதாக இருந்தது. குடி, வெறி, காமம், ஊழல் போன்ற பலவீனங்களுக்கு ஆட்பட்ட தலைவர்களால் பயன் இல்லை. அதனால்தான்அமரர் வன்னியசிங்கம் தலைவர் தரத்தை— உயரமாகவைத்துக்கொண்டார். மக்களுக்கு எட்டாதவராக அல்ல! மக்களுடன் தொடர்புகொண்டவராக மக்களில் ஒன்றுபட்டவராக பங்காளியாக அவர் இருந்தார். ஒழுக்க சீலராக தலைவருக்கான தரத்தை உயர்வாக வைத்துக் கொண்டார், இன்று எம்மிடம் முதிய தலைவர்கள், அனுபவமுள்ள தலைவர்கள்போதாது அன்று தந்தை செல்வா, டாக்டர் நாகநாதன், அமரர் வன்னியசிங்கம்போன்ற மூத்த தலைவர்களது அனுபவமும் வல்லமையும் எமக்குத் துணை நின்றன. இன்று இருப்பவர்கள் இரண்டாவது தலைமுறையினர்தான். ஆகவேதான் நாம் கூட்டுப் பொறுப்புடன் நடந்து கொள்ளுகிறோம். எமக்குள் சிந்தனையில், கருத்தில் அபிப்பிராய வித்தியாசங்கள் இல்லாமல் இல்லை. ஆனால் தனிமரம் தோப்பாகாது என்பதை உணர்ந்து சேர்ந்து இணைந்து இயங்குகிறோம். வித்தியாசப்பட்ட அபிப்பிராயங்களின் மத்தியிலும் ஒருமித்தமையக் கருத்துக்கு அமைந்து இயங்குகிறோம் இதற்கு முன்னாப் சுதந்திரப் போராட்டம் நடத்தாதவர்கள். ஆகவே முன் அனுபவம் இருக்க முடியாது. சேர்ந்து இயங்குவதுதான்சுதந்திரம். எம்மிடம் தலைமையை ஏற்க மூன்றாவது தலைமுறை கிடையாது. வீரமும் துணிவும் இருந்தால் போதாது. கண்ணியம் கட்டுப்பாடு பேணப் படாவிடின் அது தற்கொலைக்கு இடமாக்கும். ஆத்திரத்தின் மத்தியிலும் சிந்தித்து பொறுப்புணர்ச்சியுடன் செயலாற்ற இளைஞர்கள் பழகிக்கொள்ள வேண்டும். ஆணைக்குப் பணிய வேண்டிய இடத்தில் விவாதிப்பவன் தளபதியால் சுடப்படுவான். பொறுப்பை உணர்ந்த இளைஞர்களிடம் தமிழ் ஈழம் அடுத்த தலைமையை எதிர்பார்க்கிறது.

—இவ்வாறு 16-9-78 சனிக்கிழமை மாலை தமிழர் விடுதலைக்கூட்டணி தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற கோப்பாய்க் கோமான் வன்னிய சிங்கம் நினைவு அஞ்சலிக் கருத்தரங்கில் பேசிய கோப்பாய் பா. உ. சி. கதிரவேற்பிள்ளை குறிப்பிட்டார். இக்கருத்தரங்கு டாக்டர் ச. அ. தருமலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

# 'மந்திரி பதவி ஏற்பதன் மூலம் இன அழிவைத் தடுக்கமுடியாது!'

## கொழும்பில் மன்னார் பா. உ. சூசைதாசன் விளக்கம்!

கடந்த 17-9-78 ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் சமாதான நீதவான் திரு. எம். எஸ். பெர்னாண்டோ, தணிக்கை சபைத் தலைவர் திரு. ஏ. ஆர். பெர்னாண்டோ, மன்னார் பாராளுமன்ற உறுப்பினர் திரு. சூசைதாசன் ஆகியோருக்கு அகில இலங்கை பரத சங்கத்தாரால் பரதகலாச்சார இல்லத்தில் வரவேற்பு அளிக்கப்பட்டது. அதில் திரு. சூசைதாசன் (பா.உ) அவர்கள் ஆற்றிய உரையின் முக்கியமான கருத்துக்கள் வருமாறு:

''இங்கே பேசிய ஒருவர் அரசுடன் தொண்டமான் அவர்கள் இணைந்துகொண்டதால் தமிழருக்கு சில நன்மைகள் கிட்டலாம் என்று கூறினார். உண்மையில் நன்மை கிடைக்குமா என்பதை நாம்எண்ணிப்பார்க்க வேண்டும், முன்னாளில் அரசுடன் இணைந்து செயலாற்றிய திரு.நடேசபிள்ளை திரு. மகாதேவா, திரு. நல்லையா, திரு. சுந்தரலிங்கம், திரு. பொன்னம்பலம், திரு.திருச்செல்வம், திரு. குமாரசூரியர் போன்றவர்கள் அரசுடன் சேர்ந்து செயலாற்றியதால் தமிழ் இனத்துக்குக் கிடைத்த நன்மை என்ன? அரசியலில் மெத்தப்படித்த இவர்களால் செய்து முடிக்க இயலாமல் போனவற்றையா திரு.தொண்டமான் அவர்கள் செய்து முடிக்கப் போகின்றார்''

''இந்த நாட்டு 'அரசுகள்' தமிழருக்குக் கொடுக்கின்ற ''அமைச்சர் பதவி'' கொஞ்சம் உயர்ந்ததாகவாவது இருக்கின்றதா? தபால் அமைச்சர் பதவிதான் தமிழருக்கு அதிகமாக வழங்கப்பட்டிருக்கிறது. மலைநாட்டு மக்கள் குடிசைகளில் வாழ்பவர் என்பதாலோ என்னவோ குடிசைக்கைத்தொழில் அதாவது சிறுகைத்தொழில் அமைச்சர் பதவியைத் தொண்டமானுக்கு கொடுத்திருக்கின்றார்கள்''

''எமது தமிழ்ஈழம் திட்டமிட்டு அபகரிக்கப்படுகின்றது. மொழி அழிக்கப்படுகின்றது. மந்திரிப்பதவி பெற்றவர்களால் இதனைத் தடுக்க முடிந்ததா? முடிகின்றதா? எமது நாடும், எமது மொழியும், கலையும், கலாச்சாரமும், அழிந்து கொண்டிருக்கையில் மந்திரி பதவி பெறுவதால் பயன் என்ன?

''கண்கள் இரண்டையும் விற்று சித்திரம் வாங்கிப் பயன் உண்டா? உதய சூரியனை விட்டுவிட்டு மின்மினியைக் கொள்ளலாமா? நாங்கள் பரம்பரை ஐக்கிய தேசியக் கட்சிக்காரர் என்று கூறிக்கொள்வதால் பெருமை ஒன்றுமில்லை. தமிழ் இனத்தின் உரிமைகளைக் காப்பாற்றிக் கொள்வதற்காக தமிழ்க்குடி ஒற்றுமையாகச் செயல்பட வேண்டும்.

—சுதந்திரன் கொழும்பு நிருபர்.

# தமிழ் விவசாயியின்

## அருமையான கண்டுபிடிப்பு!

கவலை வேண்டாம், சுமிதியோன், அம்புஸ் போன்ற மருந்துகளிலும் பார்க்க அதிசிறந்த பயமில்லாத கிருமி நாசுனி மாட்டின் சிறுநீர். எனது 3 முறை வெங்காய நடுகையின் அனுபவத்தைக் கொண்டே இதை எழுதுகின்றேன்.

3 கலன் நீருடன் பால்ரின் பேணியால் ஒரு பேணியோ அல்லது 2 பேணியோ மாட்டின் சிறுநீரைக் கலந்து நிலம் நன்றாக நனையும்படி மாலை நேரத்தில் விசிறவும், வெங்காயம் தாட்ட 3ம் நாளிலிருந்தே 4, 5 நாட்களுக்கொரு தடவை விசிறிவரவும், தாட்டுநாட்சென்று விட்டாற்கூடக்கவலை வேண்டாம். மேற்கூறப்பட்ட விதத்தில் 2 முறை விசிறவும் பின் தாழ்களை நுள்ளிக்கிழித்துப் பார்க்கவும் புழுக்களையே காணமுடியாது. தற்செயலாக இருந்தால் 3ம் முறையும் விசிறவும். தாழின் உள்ளே உள்ள புழுக்கள்கூட முற்றாக அழிந்து விடும்.

மேலும் புழுக்கள் உற்பத்தியாவதைத் தடுப்பதற்கு 4, 5 நாட்களுக்கொருதடவை விசிறிவரவும் புழுக்கள் தின்றுபழுதடையும் நிலையில் உள்ள காய்கள்கூட திருத்தமுற்று வளர்வதையும் நல்ல விளைச்சலையும் பெறமுடியும் அத்துடன் காய்கள் காய்ந்து வற்றுந் தன்மைகுறைவதுடன் நல்ல சுவையுடையதாகவும் இருக்கும். இதைச் செய்துபார்த்து உங்கள் அனுபவத்தை எழுதுங்கள். மாட்டின் சிறுநீரை எடுத்து 3 நாட்களின் பின்பே பாவிக்கவேண்டும். உடன் எடுத்த சிறுநீர் புழுக்களைக் கொல்லுந் தன்மை குறைவு, அத்துடன் தாழ்கள் அதிகம் வளரச் செய்யுந்தன்மையுடையது.

நான்கு முறை சுமிதியோன் பாவித்தும் கட்டுப்படுத்த முடியாத புழுக்களை ஒரு முறை மாட்டின் சிறுநீர் பாவித்து வெற்றிபெற்றதால் இதனை மற்றவர்களும் பாவித்துப்பயன் பெற வேண்டுமென்றுஇதை எழுதுகின்றேன்.

நஞ்சு மருந்துகளை நீக்கிச் செலவில்லாத மருந்தைப் பாவித்து எல்லோரும் நன்மை பெறுக.

—ம. சண்முகம் ஆசிரியர்

# வந்தாறுமூலையில் சுதந்திரனுக்கு இருட்டடிப்பா?


வந்தாறுமூலை பொது நூல் நிலையத்திற்கு சுதந்திரன், சுடர் பத்திரிகைகளை வாங்குவதில்லையென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாம். இதையறிந்து இப்பகுதி மக்கள்—குறிப்பாக இளைஞர்கள் கொதிப்படைந்துள்ளனர். சுதந்திரன், சுடர் பத்திரிகைகளை தமது செலவிலேயே இந்த நூல்நிலையத்திற்குவாங்கிப்போடுவதற்கு வந்தாறுமூலை இளைஞர்கள் இப்போது தீர்மானித்துள்ளனர்.

# பதவி உயர்வு

யா/நயினாதீவு மகா வித்தியாலய உதவி அதிபராக இருந்த திரு. சி. க. தருமலிங்கம் ஆசிரியர் 22-9-78ல் இருந்து யா/நயினாதீவு ஸ்ரீ கணேசா க. ம. வித்தியாலய அதிபராக பதவி உயர்த்தப்பட்டு உள்ளார். இவர் நயினாதீவின் பிரபல சமூக சேவையாளராவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லைப்பிரதேசத்தில் நம் 'தேயக்கொடி'



புதிய அரசியலமைப்பை பகிஷ்கரித்து தமிழ் ஈழத்தில் நடைபெற்ற எதிர்ப்பியக்கத்தின் போது தமிழ் ஈழ எல்லைப் பிரதேசமாகிய வவுனியாவில் முத்துமாரிஆலயத்தின் முன் வவுனியா பா. உ. வும், த. வி. கூ. தலைவர்களிலொருவருமான திரு. தா. சிவசிதம்பரம் தமிழீழத் தேசியக் கீதத்துடன் உதயசூரியன் கொடியை ஏற்றிவைக்கும் காட்சி,

# "நமது திட சித்தமே சுதந்திரத்துக்கு ஒரே வழி!"

## ஏழாலை 'கருத்தரங்கில் பேச்சு!

"வடக்கு, கிழக்கை மட்டுமல்ல அதற்கு அப்பால் வடமேற்கையும் கட்டியாண்டவன் தமிழன் என்பது வரலாறு கூறும்உண்மை. இன்று வடமேற்கை இழந்துவிட்டோம். கிழக்கில்4000 சதுர மைலில்ஏறத்தாழ2000சதுர மைல் நிலப்பரப்பை திட்டமிட்ட சிங்கள ஆக்கிரமிப்பினால் இழந்துவிட்டோம். மீதியையும் விழுங்கி ஏப்பம் விட மதுறு ஓயாத் திட்டமும் ஏனைய குடியேற்றத் திட்டங்களும் சிங்கள அரசினால் உருவாக்கப்படுகின்றன, ஆபத்து தமிழர் நிலத்துக்குமட்டுமல்ல — தமிழர் வணங்கும் கடவுள்களான கோணேசருக்கும், கேதீச்சரத்தானுக்கும்கூட ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் எஞ்சியுள்ள நிலப்பரப்பையாவது நாம் பாதுகாத்து, அங்கு எமது இறைமையை நிலைநாட்டி சுதந்திர மக்களாக வாழ்வதற்கு ஒவ்வொரு தமிழனும் பார்வையாளனாக இல்லாது பங்காளனாக மாறி தமிழ்ஈழத்தின் தேசிய விடுதலைப் போராட்டத்தில்முன்னணி வகிக்கவேண்டும்!''

— மேற்கண்டவாறு ஏழாலைஉதயசூரியன் படிப்பகத்தில் 5-9.78 செவ்வாய்க்கிழமை மாலை நடைபெற்ற கூட்டணிக் கருத்தரங்கில் உரையாற்றிய திரு. ஈழவேந்தன் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில்சுதந்திரன் ஆசிரியர் திரு, கோவை மகேசன் பேசுகையில் கூறியதாவது;-

''நாம் நமது தமிழ்ஈழ சுதந்திர இலட்சியத்தில்எவ்வளவு தூரம்அந்தரங்கசுத்தியுடனும் உறுதியுடனும் பிடிவாதமாகவும் தியாகசிந்தையுடனும் இருக்கிறேமோ அவ்வளவு தூரம் எமக்கு வெற்றி கிட்டும்; இறைவனின் அருளும்கிட்டும். வெளிநாடுகளின் உதவியும் கிட்டும். நாம் உறுதியுடன்நமது விடுதலைக்குப் போராடத் தயாராகிவிட்டோம்; இதிலிருந்து பின் வாங்கமாட்டோம்; சலுகைகளைக்கண்டு களத்தைவிட்டுஓடிவிடமாட்டோம்; என்ற நம்பிக்கை வெளிநாடுகளிலுள்ள நமது நண்பர்களுக்கு ஏற்படவேண்டும். அந்த நம்பிக்கை ஏற்படும் விதத்தில் நமது செயல்கள் அமையவேண்டும். நாம் கடைப்பிடிக்கும் உறுதியைப் பொறுத்தே வெளிநாடுகள் நமக்கு கை கொடுக்க முன்வரும். வங்க தேச மக்கள் தமது சுதந்திரத்தை மீட்டெடுப்பதில் காட்டிய உறுதியே இந்தியாவை அவர்களுக்கு உதவ வைத்தது.

''யாரும் நமக்கு உதவலமேதவிர—நமது சுதந்திரத்துக்காக நாமே போராடவேண்டும்; அழுதும்பிள்ளை அவளே பெறவேண்டும். வேண்டுமானல் குத்து அதிகப்படும்போது, வேதனை தாங்காமல் முனகுவோனல், அயலவர்கள் மருத்துவச்சி வேலைபார்க்க முன்வரலாம், எனவே நமது நாட்டு விடுதலைக்கு நாமே போராடவேண்டும்.';

திரு. வி, பொன்னம்பலம் எம். ஏ. பேசுகையில், அரசியல் சட்டங்கள் மாறிமாறி வரக்கூடியதென்றும், அதைக்கண்டு அஞ்சியோ மயங்கியோ தமிழ் மக்கள் தமது சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தைக் கைவிட முடியாதென்றும் ஜே. ஆர், ஆட்சி, ஏழைகள் வயிற்றிலடித்துவருவதாகவும் குறிப்பிட்டார்,

# "புதிய அரசியலமைப்பின்கீழும் தமிழன் இரண்டாந்தரப் பிரஜையே!"

## சிந்தனைச் சிற்பி கதிரவேற்பிள்ளை அரசியல் விளக்கம்!

"நானூறு வருடங்களாக அன்னியர் ஆட்சியில் அடிமைப்பட்டிருந்த இலங்கை விடுதலை அடைந்தும், இந்நாட்டில் வாழ்கின்ற தமிழ் மக்களுக்கு இன்றுவரையும் சுதந்திரம் கிடைக்கவில்லை. அவர்கள் இந்நாட்டில் இரண்டாந்தரப்பிரசைகளாக வாழ்ந்து வருகின்றார்கள். காரணம் வெள்ளைக்காரர் கொடுத்த சுதந்திரம், சிங்கள மக்கள் கையில் தங்கி விட்டது. ஆளும் உரிமையைப் பெற்றுக்கொண்ட பெரும்பான்மைமக்களைக்கொண்ட சிங்கள அரசு, தமிழர்களை அடக்கி ஆண்டுவருகின்றது. இந்நிலை நீங்க வேண்டுமாயின் தமிழர்கள் சுதந்திரமான, பூரண உரிமையுள்ள ஒரு அரசை அமைத்தேயாக வேண்டும்.''

இவ்வாறு திரு. சி. கதிரவேற்பிள்ளை பா. உ. அவர்கள் அரசாங்க கூட்டுத்தாபன ஊழியர்கள் சங்கத்தின் சார்பில் ''புதிய அரசியல் அமைப்பும், தமிழர் நிலையும்'' என்னும் விடயம் பற்றிப் பேசுகையில் குறிப்பிட்டார்.

இக்கருத்தரங்கு கொழும்பு விவேகானந்தா சபையின் வளவில்த.தொ.ச கூட்டணி தலைவர் திரு. சே. மா. செல்லத்தம்பு அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தொடர்ந்து திரு.சி.கதிரவேற்பிள்ளை பேசுகையில், "புதிய அரசியல் சட்டத்தில் தமிழ்மொழிக்கு உரிமை கொடுக்கப்பட்டிருப்பதாக பிரமாதமாகக் கூறுவதில் எவ்வித அர்த்தமும் இல்லை. இப்புதிய அரசியல் சட்டம் தொடர்ந்தும் தமிழர்களை இரண்டாம் பிரசைகளாகவே வாழ வைக்கின்றது. இவ்வரசியல் சட்டத்தில் தமிழ்ப்பிரதேசம் பாதுகாக்கப்படுவதற்கு [illegible] விதியும் இல்லை. தொடர்ந்து தமிழ்ப்பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்கள் நடத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. எனவே தமிழர்களாகிய நாங்கள் எமது பிரதேசத்தில் குடியேறி எமது பாரம்பரிய பிரதேசத்தைப் பாதுகாக்க வேண்டிய நிலைமையில் உள்ளோம். தமிழீழத்துக்கு அப்பால் வாழ்கின்ற தமிழர்கள் இன்று பணயக் கைதிகளாக வாழ்ந்து வருகிறார்கள். இங்கு வாழவேண்டிய அவசியம் இல்லாதவர்கள் தமிழ் ஈழத்துக்கு சென்று குடியேறவேண்டியது அவசியம். ஆகஸ்ட் 77 இல் நடந்த இனக்கலவரம் சிங்களப்பகுதியில் வாழும் தமிழ் மக்களுக்கு ஏற்படக்கூடிய நிலைமையை தெளிவாக உணர்த்தி உள்ளது.

"தமிழ் மக்கள் தங்கள் உயிரையும், உடமைகளையும், பாதுகாத்துக்கொள்வதற்காகவே பாதுகாப்பான தமிழ்ப் பகுதிகளுக்கு சென்று குடியேறுமாறு அறிவுரை கூறுகின்றோம். நாம் நம்மை ஆளுவதற்கு தயார் செய்ய வேண்டுமாயின் எமது பொருளாதாரங்களைப் படிப்படியாக நிலையான இடத்தில் உறுதிப்படுத்த வேண்டும். ஆகவே பொருளாதார வள படைத்தவர்கள் தங்கள் முதலீடுகளைத் தமிழ்ப் பகுதிகளில் செய்வது விவேகமான செயலாகும். ஆரம்பத்தில் இது எமக்கு கஷ்டமாக இருந்தாலும் நீண்ட காலத்தில் எம்மவர்களுக்கு பெரும் பயனுள்ளதாக அமையும்.

"கிழக்கு மாகாணத்தில் விவசாயம் செய்வதற்கு வளமுள்ள காணிகள் பலவுண்டு. [illegible] யேறி விவசாயத்தை வளர்ப்பதோடு சிங்கள மக்களின் குடியேற்றத்தைக் குறைப்பதற்கு இதுவே சிறந்த வழியாகும். புதிய அரசியலமைப்பில் நாம் மயக்கமடைந்து விடாது எமது சுதந்திர தாகத்தை தொடர்ந்து வளர்த்து வத வேண்டியது அவசியமாகும் என்றார்.

அங்கு கேட்கப்பட்ட பல கேள்விகளுக்கு மிகத்தெளிவான விளக்கங்கள்அளிக்கப்பட்டன. இறுதியில் அ.கூ. ஊ.ச. பொதுச் செயலாளர் திரு. ஐ, தி. சம்பந்தன் நன்றியுரை கூறினர்.

விவேகானந்தா சபையின் சிறிய மண்டபம் இக்கருத்தரங்கிற்காக ஒழுங்கு செய்யப்பட்டது. இறுதி நேரத்தில் விவேகானந்தா சபையின் பொதுச் செயலாளர், திரு. க. இராஜபுவனீஸ்வரன், ஜே. பி. அவர்கள் அனுமதி கொடுக்க மறுத்ததின் காரணமாக விவேகானந்த சபையின் வெளிவளவில் இக்கூட்டம் நடைபெற வேண்டிய நிர்ப்பந்த நிலை ஏற்பட்டது குறிப்பிடத் தக்கது.

## தனிச் சிங்களத்தில் கடன்பத்திரங்கள்

மொழிப் பிரச்சினை தீர்ந்து விட்டதாக முகாரி பாடிவருகிறார் அமைச்சர் தேவநாயகம். ஆனல் ஒவ்வோர்நாளும், முந்திய ஆட்சிக்காலத்தையும் விட மோசமாக தமிழ் மக்களின் தொண்டைக்குள் இப்போது தனிச்சிங்களம் படுவேகமாகத் திணிக்கப்பட்டு வருகிறது.

இதோ ஒரு உதாரணம்; திருகோணமலை மாவட்டத்திலுள்ள பனிக்கட்டிமுறிப்பு கிராமாட்சி மன்ற எல்லைக்குள் பெரும் பான்மையாக வாழ்பவர்கள் தமிழர்கள். இவர்களுக்கு முதளிக்குள ப. நோ. கூ. சங்கம் விவசாயக்கடன் பத்திரங்களை தனிச் சிங்களத்திலேயே வழங்கிவருகிறது. இதனுல் மொழி புரியாத அப்பாவி தமிழ் விவசாயிகள் அல்லற்படுகின்றனர்.

இதுகுறித்து இந்த மக்கள் திருகோணமலை அரசாங்க அதிபர், அதிஉத்தமர் ஜே. ஆர். பிரதமர், சேருவில ஜி. தே. க. பா. உ. ஆகியோருக்கு 7-8-78ல் முறைப்பாடு ஒன்றை அனுப்பிவைத்தும் அது இது வரை கவனிக்கப்படவே இல்லையாம்!

"நீம் வாசனை சோப்"

சுத்தமான வேப்பெண்ணெய் கலந்து தயாரிக்கப்பட்ட நீம் வாசனை சோப்பை வாங்கிஉபயோகியுங்கள் உங்கள் சருமத்தின் பாதுகாப்பிற்கு மிகவும் சிறந்தது.

மில்க்வைற்-யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை மாணவர்களுக்கு ஆதரவாக

# தமிழ்ஈழமடங்கிலும் பாடசாலை பகிஷ்கரிப்பு?

## மாணவ, இளைஞர் அமைப்புக்கள் ஆலோசனை

புதிய அரசியலமைப்பு அமுலுக்கு வந்த செப்டம்பர் ஏழாம் திகதி திருக்கோணமலை இந்துக் கல்லூரியில் சிங்கள தேசியக்கொடி எரிக்கப்பட்டதாகக் கூறப்படும் விவகாரம் தொடர்பாக மேற்படி கல்லூரியிலிருந்து வகுப்புக்களுக்குச் செல்லவிடாது தடுத்து வைக்கப்பட்டுள்ள மூன்று மாணவர்களையும் மீண்டும் வகுப்புக்களுக்கு செல்ல தாமதமின்றி அனுமதிக்கப்படாவிடின் அவர்களுக்கு ஆதரவாக தமிழ் ஈழமடங்கிலுமுள்ள சகல தமிழ்ப் பாடசாலை மாணவர்களும் பாடசாலைப் பகிஷ்கரிப்பிலீடுபட திட்டமிட்டு வருகின்றனர்.

திருக்கோணமலை இந்துக் கல்லூரியிலிருந்து வகுப்புக்களுக்கு செல்ல விடாது பா. அருள்தேவன், பிரான்சிஸ் அன்ரனி, எச். கோவர்த்தனன் ஆகியமூன்று மாணவர்களும் மேற்படி தேசியக் கொடி எரிப்பு சம்பவம் தொடர்பாக திருகோணமலை இந்துக்கல்லூரி அதிபர் திரு. கே. நடராசா, ஆசிரியர் திரு. பாலசுப்பிரமணியம் ஆகியோரும் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்துக்கல்லூரியை சேர்ந்த மூன்று மாணவர்களும் கல்லூரியிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டதை ஆட்சேபித்து, திருகோணமலை இந்துக்கல்லூரி, விக்னேஸ்வர மாவித்தியாலயம், சென். சேவியர் மகாவித்தியாலயம், சென், ஜோசெப் கல்லூரி ஆகியவற்றைச் சேர்ந்த மாணவ மாணவியர் செப்டம்பர் 22ம் திகதியன்று ஒருநாள் அடையாளப் பகிஷ்கரிப்பை நடத்தினர். திருகோணமலையிலுள்ள சகல பாடசாலைகளையும் பகிஷ்கரிப்பிலீடுபடுத்தும் முயற்சியும் இப்போது நடைபெறுகிறது.

திருகோணமலை இந்துக் கல்லூரி மாணவர்களின் பிரச்சினை தீர்க்கப்படாதவிடத்து, இவர்களுக்கு ஆதரவும் அனுதாபமும் தெரிவித்து தமிழ் ஈழமடங்கிலுமுள்ள பாடசாலை மாணவர்கள் பகிஷ்கரிப்பு ஒன்றை நடத்துவதுபற்றி இப்போது ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

இப்பகிஷ்கரிப்பு சம்பந்தமாக பல்வேறு பாடசாலைகளின் மாணவர் அமைப்புக்களும் இளைஞர் பேரவையும் துரிதமாக ஆலோசித்து வருவதுடன், நிலைமையை உன்னிப்பாக அவதானித்து வருகின்றன.

## கூட்டணியின் தீர்மானத்துக்கு நடராசா பாராட்டு

"தமிழ் ஈழத்து நீதிமன்றங்களில் இன்று தமிழ் ஒலிக்கிறது; தமிழ்த்தாய் நீதிமன்றங்களில் கொலுவீற்றிருக்கிறாள் இதை முறியடிப்பதற்காக- தமிழுக்கு இருந்துவரும் உரிமையை பறிப்பதற்காக— நீதிமன்றங்களில் இன்றைய அரசினால் ஆங்கிலமும் சிங்களமும் இன்று புகுத்தப்படுகிறது; இது தமிழுக்கு செய்யப்படும் ஓர் மா பெரும் கொடுமை." இக்கொடுமையை எதிர்த்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய செயற்குழு தீர்மானம் எடுத்துள்ளதாகப் பத்திரிகைகளில் பார்த்தேன். அதற்காக கூட்டணியைப் பாராட்டுகிறேன்"

—இவ்வாறு இருபாலையில் 17-9-78ல் நடைபெற்ற அமரர் வன்னிய சிங்கம் நினைவு விழாவில் பேசிய முன்னாள் மூதவை உறுப்பினர் திரு. சு. நடராசா குறிப்பிட்டார்.

இவ்விழாவுக்கு கோப்பாய் பா. உ. திரு. சி. கதிரவேற்பிள்ளை தலைமை தாங்கினார், கோப்பாய்த்தொகுதி த.வி. கூட்டணிக் கிளையினர் ஏற்பாடு செய்திருந்த இவ்விழாவில் கோப்பாய்க்கோமான் அமரர் வன்னிய சிங்கத்தின் அரும் பெரும் சேவைகளை விளக்கி திருவாளர்கள் வி. யோகேஸ்வரன், கா, பொ. இரத்தினம், த. இராசலிங்கம், துரைரத்தினம், வி, தர்மலிங்கம், புலவர் திருநாவுக்கரசு, கோவை மகேசன், வண்ணை ஆனந்தன், செல்விவசந்தமலர் சின்னத்துரை, சபாரத்தினம், சட்டத்தரணி யோகேஸ்வரன் உட்படப்பலர் உரையாற்றினர்.

## காசி, மாவைக்கு காலவரையறையின்றி விளக்கமறியல்

மட்டக்களப்பில் புதிய அரசியலமைப்புபகிஷ்கரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக பொலிசாரால் குற்றம் சாட்டப்பட்டுள்ள மட்டக்களப்புத் தொகுதித. வி. கூ. செயலாளரும், கூட்டணி மத்திய செயற்குழு உறுப்பினருமான உணர்ச்சிக்கவிஞர் காசி ஆனந்தன், தமிழ் இளைஞர் பேரவை அமைப்பாளரும் கூட்டணி மத்திய செயற்குழுவின் மற்றோர் உறுப்பினருமான மாவை சேனாதிராசா, மட்டக்களப்பு தொகுதி த. இ. பே. தலைவர் பொன்.வேணுதாஸ் ஆகியோருட்பட 11 இளைஞர்களும் மட்டக்களப்பு நீதிமன்றத்தினால் கடந்த 22-9-78 அன்று காலவரையறையின்றி விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இவர்கள் 6-9-78ல் மட்டக்களப்பில் அரசியலமைப்பு பகிஷ்கரிப்பு துண்டுப்பிரசுரம் விநியோகித்தபோது கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

கவிஞர் காசி ஆனந்தனும், மாவை சேனாதிராசாவும் அண்மையில் கியூபா மாநாட்டுக்கு சென்றிருந்ததும், அங்குவைத்து அனைத்துலக நாட்டுப் பிரதிநிதிகளின் முன்னிலையில் சிங்கள அரசின் இனத்துவேஷ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை அக்குவேறு ஆணிவேறாகஅம் பலப்படுத்தி ஜே. ஆரின் தார்மீக முகமூடியைக் கிழித்தெறிந்ததும் தமிழ்ஈழப் போராட்டத்துக்கு ஆதரவு கோரி உரையாற்றியதும் வாசகர்கள் அறிந்ததே.

## உடுப்பிட்டி இந்துக் கல்லூரியில் சுதந்திரன் ஆசிரியர் பேசுகிறார்!

எதிர்வரும் 29-9-78வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு உடுப்பிட்டி இந்துக்கல்லூரி மாணவர்கள் கூட்டத்தில் "சாதியொழிப்பும் சமுதாய மறுமலர்ச்சியும்" எனும் தலைப்பில் சுதந்திரன் ஆசிரியர் திரு. கோவைமகேசன் உரையாற்றுவார்.

## தமிழினம் சங்—

—1-ம் பக்கத் தொடர்

மத்தியூ போன்ற ஜே.ஆரின் வலதுகரமாக விளங்கும் அமைச்சர்களும் பலகாலமாக வலியுறுத்திவருவது தெரிந்ததே. இப்போது சிங்கள பௌத்த இனவாதத்தின் மூலாதார மூர்த்தியாகிய ஜனாதிபதிஜே: ஆர். ஜெயவர்த்தன அவர்கள் தமது திருவாயாலேயே சிங்களக் குடியேற்றத்தின்மூலம் தமிழர் நாட்டைச் சூறையாடும் தமது கொள்கையை பகிரங்கமாக முன்வைத்து விட்டார்.

வடக்கில் சிங்களவர்களையும், தெற்கில் தமிழரையும் குடியேற்றப் போவதாகவும், இக்கொள்கை அமுலுக்கு வரும்போது தமிழ் ஈழக்கோரிக்கை தானகவே மறைந்து விடுமென்றும் அதி உத்தமரான ஜே.ஆர். ஜெயவர்த்தன அறிவித்துள்ளார்.

தமது பாரம்பரியத் தாயகத்தில் தம்மைத்தாமே ஆள வேண்டும் என்ற தமிழ் தேசிய இனத்தின் ஜனநாயகக் கோரிக்கையை ஒழித்துக்கட்டுவதற்கு ஒரேவழி— தமிழ் மக்களுக்கென்று தனியான சொந்த நிலப்பரப்பு இல்லாமற்செய்வதே என்ற முடிவுக்கு ஜே. ஆர். அரசு வந்து விட்டது.

கிழக்கு மாகாணத்தில் மதுறு ஓயாத்திட்டம் மூலம் மட்டக்களப்புத் தமிழ் பிரதேசம் விழுங்கப்படப்போகிறது; திருகோணமலை வேகவேகமாகச் சிங்களமயமாகி வருகிறது; வடபகுதிகளிலும் சிங்களவரைக் குடியேற்றி தமிழர் வாழ்விடத்தைப்பறித்து விட்டால் தமிழினம் சிதறிச் சீரழிந்து நிர்மூலமாகி சிங்கள இனத்துடன் சங்கமமாகி விடும் என்று சிங்கள ஏகாதிபத்தியம் எதிர்பார்க்கிறது.

வடக்கில் சிங்களவரைக் குடியேற்றப் போவதாக கூறியுள்ள அதே மூச்சில் தெற்கில் தமிழரைக் குடியமர்த்தப் போவதாக ஜே. ஆர். கூறியுள்ளது உலகை ஏமாற்றும் வெறும் கண்துடைப்பு பேச்சாகவே காணப்படுகிறது.

தெற்கில் குடியேறி ஆடுமாடு போல சிங்களவனால் வெட்டி சாய்க்கபடுவதற்கும் தமிழ் பெண்களின் கற்பை சிங்கள வெறியனுக்கு பலிகொடுக்கவும் பாடுபட்டுத் தேடிய சொத்தை இழக்கவும் எந்த ஒரு தமிழனும் முன்வரமாட்டான் என்பது ஜே. ஆருக்கு தெரியாமற் போகாது; வடக்கில் சிங்களவர்களைக் குடியேற்றும் தமது அநியாயக்கொள்கையை நியாயப்படுத்தவே தெற்கில் தமிழரைக் குடியேற்றப்போவதாகவும் ஒரு 'கப்ஸா' அடித்திருக்கிறாரென்று கூறப்படுகிறது;

வடக்கில் சிங்களவர் குடியேற்றப்பட்டாலும், தெற்கில் தமிழர் குடியேற்றப்பட்டாலும் இதனால் முற்றாக அழிந்து போகப்போகிற இனம் தமிழினமே என்பதையும் தமிழினத்தை முற்றாகச் சங்காரம் செய்யும் யூ.என்.பி. அரசின் பாஸிஸ இனவெறிப் பாஸிசத் திட்டமே இது என்று அரசியல் வட்டாரங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் உண்மையான வடிவம், இப்போது அம்பலத்துக்கு வந்துவிட்டது; தார்மீகவேஷம்கலைந்துவிட்டது; தமிழினத்தை ஒழித்துக்கட்டும் ஹிட்லரின் வாரிசுவே ஜே. ஆர். என்பது இப்போது வெட்டவெளிச்சமாகி விட்டது. ஜே. ஆரின் தமிழின ஒழிப்புத் திட்டத்தை எதிர்க்கத் தமிழன் அணிதிரளட்டும். தா[illegible] காக்க உறுதியுடன்போராடட்டும்.

## தொழிற்சங்க

—1-ம் பக்கத்தொடர்

உலக தொழிற்சங்க சம்மேளனம் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவை தந்திமூலம் கேட்டுள்ளது.

"சில கோரிக்கைகளை முன்வைத்து இலங்கைத்தொழிற் சங்கக் கூட்டுக்கமிட்டி இம்மாதம் 28ம் திகதி நடத்தவுள்ள வேலைநிறுத்தத்தை இலங்கை அரசு சட்டவிரோதமாகப் பிரகடனம் செய்துள்ளது, தொழிற் சங்க உரிமை தொடர்பாக 9வது உலக தொழிற்சங்கக் காங்கிரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச பிரகடனங்களுக்கும் சர்வதேசதொழிற்சங்க தீர்மானங்களுக்கும் இது முரணானது. எனவே தொழிலாளர்களினதும், தொழிற்சங்கங்களினதும் உரிமைகளுக்கு மதிப்பளியுங்கள் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்"

இவ்வாறு உலக தொழிற் சங்க சம்மேளனத்தின் சார்பில் அதன் பொதுச் செயலாளர் திரு. என்றிக் பஸ்போ [illegible] அனுப்பியுள்ளார்.

## சன்சோனி கொமி

—1-ம் பக்கத் தொடர்

ளரான சட்டத்தரணி திரு. எஸ். சி. சந்திரகாசன் அவர்களையும் சந்தித்து விசாரணை நடத்தினர்.

"சன்சோனிக் கொமிஷன் எவிடென்ஸ்" என்ற இதழ் முறைப்படி புதினப் பத்திரிகையாக சட்டரீதியாகப் பதிவுசெய்யப்பட்டு வெளியிடப்படுகிறதென்றும், சன்சோனி ஆணைக்குழு முன் வெளியிடப்படும் தகவல்களை அப்படி அப்படியே குறிப்பிட்ட பத்திரிகையில் பிரசுரிப்பதாகவும், பொலிசாரைப்பற்றி சன்சோனி ஆணைக்குழு முன் கூறப்பட்டவைகளும் பத்திரிகையில் அப்படி அப்படியே வெளியிடப்பட்டதாகவும் அதனால் தான் பொலிசார் மிரட்சியடைந்துள்ளதாகவும் திரு. சந்திரகாசன் தம்மைச் சந்தித்த சி.ஐ.டி. யினரிடம் தெரிவித்தார்.

## தொண்டமான் தேவநாயகத்தின் நிலை என்ன?

தமிழ் பிரதேசங்களில் சிங்களவர்களைக் குடியேற்றுவதே அரசின் கொள்கையென்று அக்குவேறு ஆணிவேறாக அறிவித்துவிட்டார் ஜனாதிபதி ஜே.ஆர். வடபகுதியில் சிங்களவர்களைக் குடியேற்றப் போவதாகவும் அவர் கொள்கைப் பிரகடனம் செய்துவிட்டார்.

இதற்குப்பின்னரும்— அரசுடன் ஒட்டிக்கொண்டிருக்கும் அமைச்சர் தேவநாயகமும், தொண்டமானும், கனகரத்தினமும் என்ன செய்யப்போகிறார்கள்? சிங்களக் குடியேற்றக் கொள்கையை எதிர்த்து— தமிழர் மரபுவழிப் பிரதேசங்களைச் சூறையாடுவதைஎதிர்த்து— அரசாங்கத்திலிருந்து வெளியேறுவார்களா? அல்லது உள்ளேயிருந்து தமிழர்நிலம் பறிபோக ஒத்துழைப்பார்களா? சிங்களம்மட்டும்தீர்மானம் வந்தபோது, அதுவரை யூ.என்.பி. யில் உறுப்பினராக இருந்து வந்த காலஞ்சென்ற கு. நடேசபிள்ளை, கண்ணீரும் கம்பலையுமாக யூ. என். பியை விட்டு வெளியேறினார்.

அன்று மொழிக்கு ஆபத்து வந்தபோது நடேசபிள்ளை வெளியேறினார்; இன்று நிலத்துக்கு ஆபத்து—தேவநாயகமும் நடேசபிள்ளையாகமாறுவாரா?

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் மகாத்மாகாந்தி வீதி 15ம் இலக்கத்திலுள்ள சுதந்திரன் அச்சகத்தில் 1978ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27ம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org